(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2020), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, என்னவென்று சொல்லுங்கள்.

பிற்பகல் 1–35

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983 பிரிவு 76-ல் திருத்தம் கொண்டு வந்து, 76A பிரிவின்மூலம் சங்கத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரை பதிவாளர் தற்காலிக நீக்கம் செய்யலாம் என்று இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. It is against the principles of natural justice and the intention of the Legislation has ulterior motive. ஏனென்றால், இந்த intention ஆனது பல்வேறு யூகத்தை ஏற்படுத்துகிறது. There is no ambiguity. Next, it is against the Parent Act. ஏனென்றால், இந்த சட்டத்திலே, தமிழ்நாடு கோ-ஆப்ரேட்டிவ் சட்டத்தில், பிரிவுகள் 34, 35, 36, 88, 61, 62-ல் என்ன disciplinary action எடுக்கலாம் என்று clear ஆக சொல்லப்பட்டிருக்கிறது. தலைவர், துணைத் தலைவர் என்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்களை disqualification தான் செய்ய முடியுமேயொழிய, தற்காலிக பணி நீக்கம் செய்ய முடியாது. தற்காலிக பணி நீக்கம் செய்யலாம் என்று சொன்னால், அந்த Board என்னவாகும்? எதற்கு Board?

@ 8–1–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2020 ஜனவரி 9] [திரு. மு. திராவிடமணி]

அப்போது, நிருவாகம் சீர்குலைந்து போகும். நிருவாகம் சீர்குலைந்து போனால், எப்படி அந்த நிருவாகத்தை நடத்த முடியும்? ஆகையால், என்ன செய்யலாம் என்றால், இவர்களை disqualification தான் செய்ய முடியுமேயொழிய, அவர்களை suspension செய்ய முடியாது. Suspension யாரை செய்ய வேண்டுமென்றால், ஊதியம் பெறக்கூடியவர்கள். இவர்கள் ஊதியம் பெறக்கூடியவர்களல்ல. ஏனென்றால், collective responsibility இருக்கிறது. இந்த Board–ல் collective responsibility இருக்கிறது; Members இருக்கிறார்கள். எல்லோருக்கும் சேர்ந்து பொறுப்பு இருக்கும். அப்படியென்றால், Board–ன் நிலை என்ன? அப்போது இது நிலையில்லாத தன்மையை ஏற்படுத்தும். ஆகவே, இது நீதிமன்றத்திற்குப் போனால், நிற்கவே நிற்காது. Mutli–litigations–ஐ ஏற்படுத்தும். ஏற்கெனவே உள்ள ஒரு சட்டம், Parent Act–லேயே clear ஆக இருக்கும்போது, இந்தச் சட்டம் தேவையில்லாத ஒரு சட்டம். பிரிவு 81–ன்கீழ் enquiry இருக்கிறது. பிரிவு 82–ன்கீழ் enquiry இருக்கிறது. பிரிவு 81–ன்கீழ் enquiry–க்கு பிறகுதான் செய்ய முடியும். Disqualification செய்யக்கூடியவர்களை, தற்காலிக பணி நீக்கம் செய்தால், அவர்களுக்கு பிழைப்பூதியம் கொடுக்க முடியும். அப்போது,பிழைப்பூதியம்என்னவாகும்? ஆகவே,இது பல்வேறு multi–litigations–யையும், நிறைய சிக்கல்களையும் உருவாக்கக்கூடிய சட்டம். இது தேவையற்றது. பழிவாங்கும் நோக்கத்தில் கொண்டுவரப்படுகிற சட்டம். ஆகவே, நிருவாகம் சீர்குலையும். ஏற்கெனவே, பார்த்தீர்களென்றால், அந்த கோ–ஆப்ரேட்டிவ்காரர்கள், அண்ணா அவர்கள் சொன்ன மாதிரி, 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்பதுபோல், கூட்டுறவின் நன்மை இருக்கும். ஆனால், இது கூட்டுறவை சிதைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கும். பயமில்லாமல் பணியாற்றிட வேண்டுமானால், இந்தச் சட்டத்தை திரும்பப் பெறுவதுதான் நல்லது. இல்லையென்றால், இது நீதிமன்றத்தில் நிற்கவே நிற்காது. Multi–litigation–க்கு வழிவகுக்கும். இந்தச் சட்டம் ஏற்கத்தக்கதல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் இவ்வளவு ஆதங்கப்பட வேண்டியதில்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வந்த பிறகுதான், இந்தக் கூட்டுறவுச்

[திரு. செல்லூர் கா. ராஜு] [2020 ஜனவரி 9

சங்கங்களே இன்றைக்கு நிலைத்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, அகில இந்திய அளவில், சிறப்பாக, ஏறத்தாழ 29 விருதுகளைப் பெற்றிருக்கிறோம். இதற்கு இரண்டு முறை ஜனநாயக முறையில் தேர்தல்களை நடத்தியிருக்கிறோம். அதனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பொறுத்த அளவிற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதில் அச்சம்கொள்ளத் தேவையில்லை. மேலும், சங்கங்களை வலுப்படுத்துகின்ற வகையிலும், இன்றைக்கு மக்கள் அதில் நிறைய நிதி போட்டிருக்கிறார்கள். அது விஷயமாக, அதைப் பாதுகாக்கின்ற வகையில்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லிதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 76-ன்கீழ் சங்கப் பணியாளர் ஒருவர் கையாடல், நம்பிக்கை மோசடி அல்லது சட்டம் மற்றும் விதிகளுக்குப் புறம்பாகச் செயல்பட்டால் அவரை தற்காலிக பணி நீக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய காரணங்களுக்காக ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் அல்லது துணைத் தலைவரை தற்காலிக பதவி நீக்கம் செய்ய இதுவரை சட்டத்தில் வழிவகை இல்லை என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சங்கத்தின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் சங்கத்தின் நிதியைக் கையாடல் செய்துள்ளார் அல்லது சட்டம் மற்றும் விதிகளுக்கு முரணாகச் செயல்பட்டுள்ளார் என்று முதல் நோக்கிலேயே தெரிய வந்தால், சங்க நலன் அல்லது பொது நலன் கருதி, அவர்களை தற்காலிக பதவி நீக்கம் செய்ய வேண்டியது அவசியம் என மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருதுகிறது.

பிற்பகல் 1-40

எனவே, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் 76A என்ற புதிய பிரிவை அறிமுகப்படுத்தி, சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டப் பிரிவின்படி தவறு புரிந்த தலைவர் அல்லது துணைத் தலைவர்மீது தண்ட வசூல், குற்றவியல் நடவடிக்கை மற்றும் தகுதி நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் வரை, தொடர்ந்து பதவியில் நீடிக்க அனுமதிக்காமல், முதல்கட்டமாக 6 மாத காலம் தற்காலிகப் பதவி நீக்கம் செய்யலாம். தேவை ஏற்படின், தற்காலிகப் பதவி நீக்கத்தை மேலும் 6 மாதகாலம் நீட்டித்தும், சட்டப் பிரிவு 81 மற்றும் 82-ன்மீதான விசாரணையில் ஆதாரம் இருப்பின், சட்டப் பிரிவு 36-ன்கீழ் நிரந்தர தகுதிநீக்கம் செய்து இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் வரை அவர்கள்மீதான தற்காலிக பதவி நீக்கத்தைத்

தொடரலாம். தலைவர் அல்லது துணைத் தலைவரை தற்காலிகப் பதவி நீக்கம் செய்தால் அவர்கள் ஆவணங்களை அழிக்கவோ அல்லது தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி விசாரணையில் தலையிடவோ அல்லது பணியாளர்களை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தவோ இயலாது என்று மாண்புமிகு அம்மாவின் அரசு கருதுகிறது. ஒரு சங்கத்தின் தலைவர் அல்லது துணைத் தலைவர், சங்கத்தை சிறப்புடன், வெளிப்படைத் தன்மையுடன் நடத்தவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசு இச்சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியுள்ளது. தற்போது மாறிவரும் சூழ்நிலையில் கணினிமயமாக்கல், சைபர் குற்றங்களைத் தடுத்தல் ஆகிய காரணிகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு கருத்தில் கொண்டுள்ளது. மாநிலத்திலுள்ள 4,449 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து கூட்டுறவு நிறுவனங்களிலும் பொதுமக்கள் 30–11–2019 வரை இட்டுவைத்துள்ள 55,599 கோடி ரூபாய் வைப்புத் தொகையினை கவனத்துடன் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு உள்ளது என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்தப் புதிய சட்டப் பிரிவு தவறு இழைத்தவர்கள்மீது பாரபட்சமின்றி நடவடிக்கை தொடர வழிவகுக்கும் என்பதுடன், கூட்டுறவின் மீதான நம்பகத் தன்மை பொதுமக்களிடம் அதிகரிப்பதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மற்றும் துணைத் தலைவரின் பொறுப்புத் தன்மையும் மேம்படும். இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, எந்த அச்சமும் கொள்ளவேண்டியதில்லை. யாருக்கும் எந்த ஆபத்தும் வராது, பாதிப்பும் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் எல்லோரும், பொதுமக்களும் இந்தச் சங்கம் நன்றாக இருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறோம். அந்த அடிப்படையில்தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2020) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டுமென்று கோருகிறேன். மேலும் அதை நிறைவேற்றிக் கொடுக்கும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே பேசிவிட்டீர்களே, பிறகு என்ன? (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவ்வளவுதான். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். சபையில் இந்த நடைமுறை எல்லாம் இல்லை. 15 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் இப்படி discuss செய்தால் எப்பொழுது முடிப்பது? (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2020 ஜனவரி 9]

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/ 2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

@ 9—1—2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.